பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 28 வெள்ளிக்கிழமை 12.07.2024 கதிர் 247

# ஒக்டோபர் 17க்கு முன் தேர்தல் நடந்தே தீரும்

## அடித்துச் சொல்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்

**அரசமைப்பின்பிரகாரம்ஒக்டோபர் 17ஆம்திகதிக்குமுன்னர்ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும் என அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரிநேற்றுநாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் தொடர்பாக எதிர்க் கட்சிகள் கோரிய சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதானவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**இலங்கையில் எந்த குறைபாடுகள் இருந்தாலும் 1931ஆம் ஆண்டில் இருந்து சர்வஜன வாக்குரிமையை தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகிறது. உரிய காலத்தில் நாட்டில் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு** 2

## இனி இது ரகசியம் அல்ல!

அரசமைப்பில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உள்ளதாகக் குறிப்பிடப்படும்குழப்பத்தை இல்லாது செய்வதற்கானஅரசமைப்புத்திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி திங்கட்கிழமை அமைச்சரவையின் அனுமதியைக் கோரியிருந்தார். அப்படி அவர் அனுமதி கோரியதை அடுத்தே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில்விவாதம்தேவை என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின. அதனடிப்படையில் நேற்று விவாதம் நடந்தது.

ஜனாதிபதித் கதிரையில் அமர்ந்த பின்னர் அதைவிட்டுச் செல்வதற்கு, இதற்கு முன்னர் இந்தப் பதவியில் இருந்தவர்களைப் போன்றே ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விருப்பம் இல்லை, அதனால்தான் அவர் எப்பாடுபட்டாவது பதவிக் காலத்தை நீடிக்க முயற்சிக்கிறார் என்ற சாரப்படவே அனைவரும் உரையாற்றினர்.

ஜேவிபி தலைவர் அனுரகுமார மட்டுமே சற்று மாறுபட்டு 2

## வடக்குக்கு இன்று வருகிறார் பிரதமர்

பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று வடக்குக்கு வருகைதருகின்றார். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அவர் பல்வேறு நிகழ்வுகளிலும்கலந்துகொள்ளவுள்ளார்.

இன்றுகாலையில்யாழ்ப்பாணத்தை விமானம்மூலம்வந்தடைவார்பிரதமர். யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். மாவட்ட மீனவர்களுக்கு சீன அரசால்அன்பளிப்புச்செய்யப்பட்டஅரிசி உள்ளிட்ட உலர் உணவுப் பொருள் பொதிகளையும் அவர் விநியோகிப்பார். இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவரும் கலந்துகொள்ளவுள்ளார்.

சுன்னாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தபால் நிலையக் கட்டடத்தை முற்பகல் 11 மணியளவில் பிரதமர் திறந்து வைக்கவுள்ளார். முற்பகல் 11. 45 மணியளவில் குருநகர் மீனவர் துறைமுகம்அருகேஉள்ளமீனவர்ஓய்வு மண்டபத்தில்மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடிச் சாதனங்கள் மற்றும் 2

## 13 இந்திய மீனவர்கள் நேற்று வடக்கில் கைது

எல்லை தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்த குற்றச்சாட்டில் இந்தியாவைச்சேர்ந்த13 இந்தியமீனவர்கள்நேற்று கடற்படையினரால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப் பட்டவர்கள்தமிழ்நாட்டின் நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பணித்த 3 இழுவை மடிப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. நெடுந்தீவுக் கடற்பரப் பரப்புக்கு அருகில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான 13 மீனவர்களையும்காங்கேசன்துறைதுறைமுகத்தில் கொண்டுவந்து இறக்கிய கடற்படையினர், 2

## தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் ஜனாதிபதியை ஓட ஓட விரட்டுவார்கள்

### நாடாளுமன்றில் நேற்று சுமந்திரன் எச்சரிக்கை

ஜனாதிபதித்தேர்தலைஒத்துவைக்க முயற்சி எடுக்கப் பட்டால் ஆளும் தரப்பையும் ஜனாதிபதியையும்மக்கள்வீதி வீதியாக துரத்தி அடிப்பார்கள், ஓடஓடவிரட்டுவார்கள்-என்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பைப்பார்த்துஎச்சரிக்கை விடுத்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல் விடயம் தொடர்பாக எதிர்க் கட்சிகள் நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையின் மீது உரையாற்றும்போதே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள்தான் என்பது அரசமைப்பில் தெளிவாக உள்ளது. அதை இப்போதுஉயர்நீதிமன்றமும் தெளிவுபடுத்திவிட்டது. இந்தநிலையில்ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான 2

## தேனில் கை வைத்தவர் விரலை சுவைக்காமல் விடவேமாட்டார்

### ஜனாதிபதித் பதவி தொடர்பில் ஹக்கீம் நக்கல்

தேனில் கை வைத்தவர்விரல்களைச் சுவைக்காமல் இருக்க மாட்டார் என்ற சிங்கள பழமொழிக்கு ஏற்பவே ஜனாதிபதியின் நடவடிக்கை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவர்ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஜனாதிபதி பதவிக் காலம் தொடர்பில் அரசமைப்பில் முரண்பாடு இருப்பதாக அமைச்சரவையில் எடுத்திருக்கும் நடவடிக்கையின் 8

## உயர் நீதிமன்ற வியாக்கியானத்திற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு சூழ்ச்சி

### ரணில் மீது நேற்று அனுரகுமார குற்றச்சாட்டு

எல்லோரும் சொல்வதைப்போன்று ரணில் தந்திரமானவர் அல்லர். ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடும் அவரது முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்டன. இருந்தாலும் ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள பொருள்கோடல், வியாக்கியானத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட ஜனாதிபதி மாளிகையில் சூழ்ச்சி இடம்பெறுகிறது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார 2

## புதிய போக்குவரத்து விதிகள் இரு வாரங்களில் அறிமுகம்

### வர்த்தமானி வரும் என்கிறார் இராஜாங்க அமைச்சர்

வீதிவிபத்துக்களைக் கட்டுப்படுத்தும்நோக்கத்தோடு புதிய வேகக் கட்டுப்பாட்டு விதிமுறைகள்அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார். புதிய விதிகள் அடங்கிய வர்த்தமானி இன்னும் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும்என்றும் அவர்தெரிவித்தார். 2

## காணாமலாக்கப்பட்டோரின் கதி பற்றிய உண்மைகள் கண்டறியப்படவேண்டும்

### அதற்கான அலுவலக அதிகாரிகளிடம் அமெ. தூதுவர் வலியுறுத்து

காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று அமெரிக்கத்தூதுவர்ஜூலி சங்வலியுறுத்தியுள்ளார்.

காணாமல்போனோர்பற்றிய அலுவலக அதிகாரிகளைச்சந்தித்துப் பேசியபோது அவர் இதனைவலியுறுத்தினார். அமெரிக்கத்தூதரகத்தின் அழைப்பின்பேரில் தூதுவர் நேற்று மாலை கொழும்பிலுள்ள தூதரகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் சார்பில் அதன் தவிசாளர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பில் அமெரிக்கத்தூதுவருக்கு விளக்கமளித்தனர் அதிகாரிகள். அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளில் இருதரப்புப்பங்காண்மை மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்வது குறித்து இருதரப்பினரும் ஆராய்ந்தனர்.

மனிதப் புதைகுழி அகழ்வு உள்ளடங்கலாக காணாமல்போனோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் மனித எச்சங்களை ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய அவசியமிருப்பதனால், இவ்வனைத்து செயன்முறைகளுக்கும் அமெரிக்காவின்நிதி, தரவு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற 2

## வன்முறைகள் தலைதூக்கி சட்டம் ஒழுங்கு சீர்குலைவு

### எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. தாக்குதல் நடத்துகிறார்கள், போகிறார்கள். எல்லா இடங்களிலும் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. இதனால் மக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆளும் தரப்பின் கடமையாகும். பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினைஏற்பட்டுள்ளது. இதனை எப்படி 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

ரணில் என்னதான் முயன்றாலும் தேர்தல் நடந்தே தீரும் என்று நம்பிக்கைவெளியிட்டார். பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர் தேர்தல் உரிய காலத்தில் நடக்கும் பயப்படாதீர்கள் என்றார். ஆனால், அவரை நம்ப நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் யாரும் இருக்கவில்லை என்பது பெரும் சோகம்.

இதற்கிடையில், அரசமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்பம் தொடர்பில் என்னநடந்தது என்பதை சுமந்திரன் விளக்கினார். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து கொண்டு வந்த மைத்திரி – ரணில் கூட்டுஆட்சியில்தான்ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மாற்றும் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அப்போதே அரசமைப்பின் 83ஆம் பிரிவில் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தொடர்பில் கவனத்தில்எடுக்கப்பட்டதுஎன்பதை சுமந்திரன் அங்கு சுட்டிக்காட்டினார்.

அந்தப்பிரிவைமாற்றுவதானால் அது தொடர்பில் மக்கள் கருத்து அறியப்படவேண்டும் என்று அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதால் அதில் கைவைக்கவேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார். அந்தத் தருணத்தில் மைத்திரியே சொற்ப வாக்குள் வித்தியாசத்தில்தான் வெற்றியைப் பெற்றார் என்பதால் மக்கள் கருத்தறியச் சென்றால் தோற்றுவிடக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே அரசமைப்பின் 83ஆவதுபிரிவுமாற்றப்படவில்லை. அது ரணிலுக்கும் நன்கு தெரியும். அவரது சம்மதத்துடன்தான் 83ஆம் பிரிவை மாற்றுவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது என்பதைச் சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.

எல்லாம்தெரிந்துகொண்டுதான், இப்போது அரசமைப்பில் குழறுபடி உள்ளதாகக் காட்டி அதில் திருத்தம் செய்யவேண்டும் என்று ஒரு சட்டத் திருத்தப் பிரேரணையை முன்வைப்பதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்பது ரணிலின் முயற்சி. அதை எதிர்க் கட்சியைச் சேர்ந்த அனைவரும் கண்டித்தனர். அரசமைப்பு தொடர்பான திருத்தங்களை அவசரமாக மேற்கொள்ள முடியாது என்பதால் ரணிலால் இனி அந்தத் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது எனவே தேர்தல் திட்டமிட்ட காலப்பகுதியில் இடம்பெறும் என்பதே அனுரகுமாரவின் வாதம்.

எதுஎப்படியிருந்தாலும் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா இல்லையா என்கிற குழப்பத்தை ரணில் வெற்றிகரமாகத் தொடர்ந்தும் பேணி வருகின்றார். பார்க்கலாம் ரணில் தான் ஒரு நரித்தந்திரம் மிக்கவர் என்று நிரூபிப்பாரா அல்லது அனுர சொல்வதைப் போன்று அவருக்கு ராஜபக்ச அளவுக்குக்கூட அரசியல் தந்திரம் தெரிந்திருக்கவில்லையா என்பதை!

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஒக்டோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவை மட்டுமே உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவில்லை. 1981ஆம் ஆண்டிலேயே தேர்தல் நடத்தப்படாது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது.

அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. எனினும் 83 (ஆ) சரத்தில் அது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அதனை மாற்றுவதற்காகவே அமைச்சரவையில் யோசனை கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதித் தேர்தல் நடக்காமல் போய்விடும் என்று சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடக்கும்.

தற்போதைய ஜனாதிபதிக்கு முன்னால் செல்ல முடியும். அதற்கான தகுதி அவருக்கு இருக்கிறது. அவர் கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுத்த வேலைத்திட்டங்களை மக்களிடம் முன்வைப்போம். அவர் வேண்டுமா என்று மக்களே தீர்மானிப்பர். மக்கள் விரும்பாவிட்டால் பதவியில் இருக்க மாட்டார். நாங்கள் தேர்தலுக்கு தயாராகவே இருக்கிறோம்.

நாங்கள் தேர்தலுக்கு பயப்பட வேண்டிய எந்தக் காரணமும் கிடையாது. வரிசை யுகத்தை இல்லாது செய்துள்ளோம். 24 மணிநேரமும் மின்விநியோகத்தை வழங்குகிறோம். சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துள்ளோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம். டொலர் இருப்பை அதிகரித்துள்ளோம். இதனால் தேர்தலுக்கு அஞ்சவில்லை. இதன்படி ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடக்கும் - என்றார்.

## 13 இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். திணைக்கள அதிகாரிகள் அவர்களை ஊர்காவற்றுறை நீதிவானிடம் முற்படுத்தினர். அவர்களை ஜூன் 25 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புப் பிரிவுகளில் மாற்றம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு வருடங்களுக்கு மேல் நீடிப்பதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற அரசமைப்பின் 83 (ஆ) பிரிவு இவ்விடயங்களில் சம்பந்தப்பட்டது அல்ல. அதை மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. அதை மாற்றி அமைப்பதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை என்ற கருத்து இருந்ததாலேயே 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அதை மாற்றாமல் அப்படியே விடுகின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இணக்கத்தோடுதான் அப்படியே அதை விட்டுவிட முடிவு எடுக்கப்பட்டது. அதனால் சர்ச்சைகளோ குழப்பங்களோ ஏதுமில்லை.

ஏற்கனவே ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்ட விடயம். இந்த 83 (ஆ) பிரிவு அரசமைப்பில் இருப்பதால் எந்தக் குழப்பமும் புதிதாக வந்துவிடாது. ஆனால், இந்தப் பிரிவுக்கு திருத்தம் கொண்டு வருகின்றோம் என்று குழப்பத்தை ஏற்படுத்த ஜனாதிபதியின் தரப்பு முயலுகின்றனர் என்று தோன்றுகின்றது. அந்தப் பிரிவைத் திருத்த சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிலைப்பாடு வருமானால், அதைக் காட்டி தம்முடைய பதவிக்காலம் 5 வருடங்கள்தானா என்பதை ஒட்டிய சர்ச்சையைக் கிளப்பலாம் என்று ஜனாதிபதி எண்ணுகின்றார் போலும்.

எது, எப்படி என்றாலும், நாடு வரும் ஒக்டோபர் 17 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அது சட்டரீதியான கட்டாயம். அதில் கைவைக்க அல்லது தேர்தலைத் தள்ளிப்போட முயற்சி எடுக்கப்பட்டால் ஆளும் தரப்பையும் ஜனாதிபதியையும் மக்கள் வீதி வீதியாக துரத்தி அடிப்பார்கள். ஓட ஓட விரட்டுவார்கள். அதனை முன் எச்சரிக்கையாகக் கூறி வைக்க விரும்புகின்றேன் - என்றார்.

## வடக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலர் உணவுகளை அவர் வழங்கி வைப்பார்.

நண்பகல் 12 மணியளவில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் குழுவுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கி வைப்பார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள புதிய வர்த்தக சேவை நிலையத்தை பிற்பகல் 2. 30 மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

மாலை 3 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்வார்.

## வன்முறைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கப் போகின்றீர்கள்?

மக்களின் பாதுகாப்பு தொடர்பில் எமக்கும் சில பொறுப்புக்கள் இருக்கின்றன. தடுக்க நாங்கள் எங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம். கொலைகள் நடக்கின்றன. இது தொடர்பில் நாங்கள் கதைக்க வேண்டும். இது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

எவ்வாறாயினும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் பெரிய வேலைத் திட்டங்களை செயற்படுத்தவேண்டும். இப்படி நாட்டை முன்னுக்கு கொண்டு செல்ல முடியுமா? சட்டவாட்சியை பலமாக செயற்படுத்தவேண்டும் என்று ஆளும் தரப்பைக் கோருகின்றேன். நாங்கள் எங்கள் பக்கத்தில் இருந்து சட்டம், ஒழுங்கு மற்றும் மக்கள் பாதுகாப்புக்காக எங்களின் ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடவத்தை பேருந்து நிலையம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தப் பேருந்து நிலையத்தில் நவீன போக்குவரத்து முகாமைத்துவ முறைகளும், நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டு 2,214 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளில் 2,321 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டும் ஜூன் 30 வரை 1,103 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளால் 1,154 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, இந்நிலைமையைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாவை இலங்கை பொலிஸாருக்கு வழங்க வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது.

மேலும், பாடசாலை மட்டத்தில் வீதிப் பாதுகாப்பு கழகங்களை (யூலிழி- நீழிகூீள- மிதீ ளீயிற்ணு) நிறுவுவதற்கு தேவையான கையேடுகளை ஆசிரியர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு இணைச்செயற்பாடாக பாடசாலைக் கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது, போக்குவரத்து விதிமுறைகளைச் சரிவரப் பின்பற்றுவோருக்குப் பதக்கம் வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## காணாமலாக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் எனும் தனது நிலைப்பாட்டை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளிடம் எடுத்துரைத்த அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாயபூர்வமான நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

"காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இலங்கையர்களுக்கு அதற்கான பதிலையும், ஆறுதலையும் வழங்குவதற்கு முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அவசியமான ஒத்துழைப்பை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது" என இந்தச் சந்திப்புக் குறித்து அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற, உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது பற்றிய ஒத்திவைப்பு விவாதத்தை தொடக்கி வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு மற்றும் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்த நிலையில் ஜனாதிபதியின் பதவி காலம் ஐந்து வருடங்களா அல்லது ஆறு வருடங்களா? என்ற சந்தேகத்தை ஜனாதிபதியின் சகாக்கள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக நீட்டிப்பது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து ஜனாதிபதி மாளிகையில் தற்போது சூழ்ச்சி இடம்பெறுகின்றது. அதில் இந்த வஜிர அபேவர்தனவும் உள்ளடங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு எவ்விதப் பிரச்சினையும், சிக்கலும் கிடையாது. ஜனாதிபதியின் பதவி காலம் ஐந்து ஆண்டுகள் என்று அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரசமைப்பு தொடர்பில் பொருள்கோடல் வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அவரது சகாக்களான வஜிர, ரங்கே ஆகியோருக்கோ கிடையாது.

அரசமைப்பின் 125 ஆவது உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்துக்கே பொருட்கோடல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளா? அல்லது ஆறு ஆண்டுகளா? என மூன்று முறை உயர் நீதிமன்றில் பொருட்கோடல் செய்யப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன தனது பதவிக் காலம் குறித்து உயர் நீதிமன்றில் வியாக்கியானம் கோரினார். பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் சிவில் பிரஜை ஒருவர் ஜனாதிபதியின் பதவி காலம் குறித்து உயர் நீதிமன்றில் வியாக்கியானம் கோரினார். அப்போதும் ஜனாதிபதியின் பதவி காலம் ஐந்து ஆண்டுகள் என்று வியாக்கியானம் வழங்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவி காலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்திய நபர் இந்த மாதமும் நீதிமன்றத்தை நாடினார். இம்முறையும் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்று உயர்நீதிமன்றம் மூன்றாவது தடவையாகவும் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள் என்று அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை உயர் நீதிமன்றம் மூன்று முறை உறுதிப்படுத்தியுள்ளது. ஆகவே இனி யாருக்கு என்ன பிரச்சினை? பதவி காலத்தில் சிக்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு தொடர்ந்து கதிரையை பிடித்துக்கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம்.

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும். ரணில் விக்கிரமசிங்க படுதோல்வியடைவார். அமைதியான முறையில் வீடு செல்வார். இதுவே நடக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தந்திரமானவர், அவர் எவ்வழியிலாவது தேர்தலை பிற்போடுவார் என்று அவருக்குச் சார்பானவர்கள் குறிப்பிடுகிறார்கள். அனைவரும் குறிப்பிடுவதை போன்று ரணில் தந்திரமானவரல்லர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மட்டுமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியையும் நிர்வகித்துள்ளார். இறுதியில் கட்சி படுதோல்வியடைந்தது. தேசியப் பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார். ஆகவே ரணில் தந்திரமானவரல்லர், இவரைக் காட்டிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசியல் தந்திரமானவர் என்று குறிப்பிடவேண்டும்.

அரசமைப்பில் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து வருடங்கள் என்றும், பிறிதொரு இடத்தில் ஆறு ஆண்டுகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த குறைப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். அமைச்சரவையும் அதற்கு அங்கீகாரம் வழங்கியள்ளது. ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியதன் பின்னர் அமைச்சரவைக்கு ஏன் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தச் சட்ட வரைவை அவசர சட்டமாக நிறைவேற்ற முடியாது. ஷ அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் அவசர சட்டம் இயற்றும் முறைமை நீக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்தம் ஆகிய விடயங்களுக்கு மாத்திரமே அவசரச் சட்டம் இயற்றப்பட வேண்டும், அரசமைப்பு தொட்பான விடயங்களை அவசர சட்டமாக இயற்ற முடியாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். ஆகவே ஜனாதிபதி தேர்தலைபிற்போடுவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்த சகல முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. மக்களை குழப்பி விட்டு அதனுடாக மகிழ்ச்சியடையும் மனநிலை ஜனாதிபதிக்கு உண்டு. தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும் என்பதில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நீர், மின்சார, எரிபொருள் கட்டணங்களை அரசு உடனடியாகக் குறைக்கவேண்டும்

## ஜனநாயக முன்னணியின் தலைவர் கோரிக்கை

(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை ஜனநாயக நாடு என்பதை நிரூபிப்பதற்காக அவ்வப்போது தேர்தல்கள் நடத்தப்படுவதுடன், நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன அதன் சுய ஆதிக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டும் என இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்த காலப்பகுதியில்நடத்தப்பட்டுஜனநாயகம்பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் நீதித்துறையின் மீதும் நிர்வாகத் துறையின் மீதும் அரசு செல்வாக்கு செலுத்தி, தேர்தல்களை திட்டமிட்டு பிற்படுத்தி ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க முடியாது.

சம்பள உயர்வு கோரியும் வாழ்க்கை செலவு உயர்வுக்கு தீர்வு வேண்டியும் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அரசாங்க ஊழியர்களுக்கு 2025 ஆம் ஆண்டிலிருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ள நிலையில், இவ்வாறான சம்பள அதிகரிப்பு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என அரசாங்க ஊழியர்களும், தொழிற்சங்கங்களும் வேண்டி நிற்கின்றன.

இதனால் 2025 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தை காத்திராமல், இப்போதே ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது அரசாங்கஊழியர்களின்வாழ்க்கைசுமையைகுறைப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும்.

இதன் அடிப்படையில் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ள மின்சார கட்டணம், நீர் கட்டணம், எரிபொருள்களின் விலைகள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைக்கின்ற போது அரசாங்க ஊழியர்களது மாதாந்த வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட்டு, அவர்களுடைய சுமை குறைவடையும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு விலை குறைப்பு செய்கின்றபோது அரசாங்க ஊழியர்கள் மட்டுமன்றி சாதாரண பொது மக்களும் நன்மை அடைவர். இவ்வாறான செயற்பாடுகளை செய்து மக்களின் அவல நிலையைப் போக்குகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இலகுவாக வெற்றியடைந்து கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதை ஜனநாயக முன்னணியின் சார்பாக வலியுறுத்திக் கூறுகிறோம்.

எனவே, நாட்டில் ஜனாதிபதி தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ நடைபெறுவதற்கு முன்பாக அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை அல்லது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை செய்கின்றபோது தேர்தல்களில் மக்கள் ஆர்வம் காட்டும் நிலை உருவாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.(05)

# கார்மேல் பற்றிமா ஆசிரியர்களுக்கு மாணவர் நன்றி கூறும் பெருவிழா



(வி.ரி.சகாதேவராஜா )

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத்தோற்றி 2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அக்கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டிக் கௌரவித்தனர்.

குறித்த மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சாதனையாளர்களை கௌரவித்தல்' வரலாற்று முக்கியத் துவமிக்க விழா கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அத்துடன் அக்கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்தியர் மஹாலிங்கம் லட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்லூரிபிரதிஅதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர் ஆசிரியர்கள் அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளைபல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இந்நிகழ்வின் போது அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.(05)





# திருவிழாக் காலங்களில் உணவுக் கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும்

## திருக்கோவில் கூட்டத்தில் தீர்மானம்



(வி.ரி.சகாதேவராஜா)

திருவிழாக் காலங்களில் ஆலய வளாகத்தில் நடத்தப்படும் உணவுக் கடைகள் விசேட பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று

திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடிஅமாவாசைஉற்சவம்தொடர்பானஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவம்தொடர்பானஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மோகனகாந்தன், ஆலய பரிபாலன சபைத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ், திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் திருமதி வீரபத்திரன, திருக்கோவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன், கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி மற்றும் திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய



திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி உற்சவம் எதிர்வரும் 2023.07.18 ஆம் திகதி கொடி ஏற்றத்துடன் ஆரம்பித்து 2023.08.04 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற உள்ளது.

இக்காலபகுதியில் ஆலயத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நலன்புரி சேவைகள் தொடர்பாக நிர்வாகசபை உறுப்பினர்கள், திருக்கோவில் பிரதேச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனிக்கவேண்டிய மோசமான போக்கு

சமூக ஊடகங்களின் தாக்கம் உச்சத்தை எட்டியுள்ள ஒரு கால கட்டத்திற்குள் நுழைந்திருக்கின்றோம். அது நன்மையா தீமையா என்பதை ஆராயவேண்டி இருக்கின்றது. பாரம்பரிய ஊடகங்களைத் தாண்டி சமூக ஊடகங்களே இளைஞர்களைப் பெரிதும் ஈர்த்திருக்கும் இந்தக் காலத்தில் நெறிமுறையற்ற சமூக ஊடகப் பாவனை ஆரோக்கியமற்ற போக்காக மாறி உள்ளது.

ஊழல், மோசடி என்பவற்றுக்கு எதிரான போக்கு என்ற பெயரில் தனிநபர் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அதுமட்டுமல்ல சில உண்மைகள் இருப்பதற்காகப் பல பொய்களைக் கட்டவிழ்த்துவிடக்கூடிய தகவல்கள் அதிகம் விரும்பப்படும் நிகழ்வுகளாகி இருக்கின்றன. அத்தோடு சம்பவங்கள் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகும் காணொலிகள் மக்கள் அவசரப்பட்டு தவறான முன்முடிவுகளுக்குச் செல்வதற்கு வழி வகுக்கின்றன. சட்டக் காவலர்களான காவல்துறையினர் எந்த முடிவுக்கும் வருவதற்கு முன்பே வெளியாகும் இத்தகைய காணொலிகளும் சந்தேகத்திற்குரிய நபர்களின் சில அறிக்கைகளும் விசாரணைகளின் சுதந்திரத்தைப் பாதிப்பதுடன் மோசமான முன்னுதாரத்தையும் ஏற்படுத்துகின்றன.

அண்மையில் கொழும்பு நகரத்தின் மையத்தில் உள்ள உயரமான கட்டடத்தில் இருந்து இரண்டு மாணவர்கள் விழுந்து இறந்தபோது, அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டனர் என்று பல சமூக ஊடக பயனர்கள் விரைவாக முடிவு செய்தனர். சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒரு சிகரெட் பெட்டியைக் காட்டுகிறது. உடனே இரண்டு மாணவர்களும் குடிபோதையில் இருந்தனர் என்று சமூக ஊடக பயனர்கள் மீண்டும் தீர்ப்பளித்தனர். ஆனால் இறந்தவர்களின் உடற்கூறாய்வு அறிக்கை வேறுவிதமாக அவர்களின் இறப்புக்குரிய காரணத்தைத் தீர்ப்பிட்டது. இத்தகைய தீர்ப்புகள் மற்றும் முடிவுகள் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டு –உயிர் பிழைத்தவர்கள், குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் நன்மையை விட அதிகம் தீமையையே ஏற்படுத்துகின்றன.

அத்துருகிரியவில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சமூக ஊடகங்களில் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதனால் ஏற்படும் ஆபத்தை எடுத்துக்காட்டியது. டாட்டூ ஸ்டுடியோ திறப்பு விழாவில் கலந்துகொள்ள இருந்த விருந்தினர்களின் பெயர்கள் உள்ளிட்ட அழைப்பிதழ் சம்பவத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு முகப்புத்தகத்தில் பகிரப்பட்டது. எனவே, அதிலிருந்த ஒருவரை அந்த நிகழ்வில் முக்கிய இலக்காகக் கொள்ள கொலையாளிகளுக்கு இலகுவாக இருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாகவும் காணொலிக் காட்சிகள் விரைவாக சமூக ஊடகங்களில் வெளியாகி, காரண காரியங்களை ஆராய்வதற்கு முன்பே மக்கள் முன்முடிவுகளுக்குச் செல்ல வழியேற்படுத்தியது.

சாவகச்சேரி வைத்தியசாலை சம்பவம் மற்றொரு உதாரணம். மக்களின் கொதிநிலை விவகாரம் ஒன்று சமூக ஊடகங்கள் மூலமாக கிளர்ச்சியாக்கப்படுவதற்கான உதாரணம் அது. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட மருத்துவரை கடந்த சில தினங்களில் மட்டும் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சமூக ஊடகங்களில் பின்தொடரத் தொடங்கியுள்ளனர். அதை அவர் ''சந்தைப்படுத்தல்'' என்று தானே வகைப்படுத்துகின்றார். அவரால் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சரியானவையா, அவற்றுக்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா, முக்கிய பொறுப்புக்களில் இருப்பவர்களின் சமூக மதிப்பைக் கெடுக்கும் வகையிலான குற்றச்சாட்டுக்களின் நம்பகத்தன்மை என்ன என்பவனவெல்லாம் ஆராயப்படுவதற்கு முன்பே மக்கள் ஒரு தீர்ப்புக்கு வரும் நிலை ஏற்பட்டுவிடுவதை அதில் பார்க்க முடிந்துள்ளது.

ஊடகவியலாளர்கள் என்கிற பெயரில் பலரும் இதுபோன்ற கிசுகிசுக்களை ஏதோ முற்றிலும் உண்மையான விடயம் என்ற தோரணையில் வெளியிட்டு இலகுவாக அவமதிப்புச் செய்கிறார்கள். ஊழல், மோசடிகளை வெளிக்கொண்டு வருகின்றோம் என்ற போர்வையில் அவர்கள் சமூக ஊடகங்களில் செய்வதெல்லாம் வெறும் ஊடகங்களை எழுப்புவதும் அவமதிப்புச் செய்வதுமே என்பதைப் பார்க்க முடிகிறது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் தனக்குத் தெரிந்த துல்லியமான உண்மைகளைத் தெரிவிக்க உரிமை உண்டு. அதேநேரம் சமூக ஊடக அறிக்கையிடல்கள் தெரிந்த துல்லியமான உண்மைகளை மட்டும்தான் வெளியிடுகின்றனவா என்பதுதான் இன்று இங்குள்ள கேள்வி. சமூக ஊடகங்களில் வரும் கருத்துள்ள செய்தி அறிக்கை பார்வையாளர்கள் அல்லது வாசகர்களிடையே ஒரு சார்புநிலையை எளிதாக்குகிறது. அதனால்தான் பக்கச்சார்பற்ற அறிக்கையிடல் இங்கு அவசியப்படுகின்றது. ஆனால் நிலமை என்னவோ நேர்மாறாகவே இருக்கின்றது.

பக்கச்சார்பான செய்தி அறிக்கையின் பின்விளைவுகளை இலங்கையர்கள் ஏற்கனவே அனுபவித்திருக்கிறார்கள். இன்று, சமூக ஊடகப் பதிவுகள் உள்ளிட்ட தகவல்களை உண்மையைச் சரிபார்க்க பல கருவிகள் இருந்தாலும், தகவல்களின் உண்மைத் தன்மையை சரிபார்க்காமல் பலர் அவற்றை நம்புகின்றனர்; பகிர்ந்துகொள்கின்றனர். சமூக ஊடகம் என்பது தங்கள் கோபத்தையும் ஏமாற்றத்தையும் தீர்ப்பதற்கும் இல்லாமல் அடக்குவதற்கும், விமர்சிப்பதற்கும், தாக்குவதற்கும், வெளிப்படுத்துவதற்குமான ஓர் இடம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதனால் காத்திரமான, நம்பகத்தன்மையுள்ள செய்தியிடல்கள் காலதாமதமான மதிப்பிழந்த நிலையை அடைகின்றன.

மற்றொரு சிக்கல் 'கிளிக்பைட்' தொடர்பானது. மக்கள் பெரும்பாலும் தவறான தலைப்புகளால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள். 'கிளிக்பைட்'டின் முக்கிய நோக்கம் அதிகபட்ச பார்வைகளைப் பெறுவது. சமூக ஊடகங்களில் இருந்து அதிக பணத்தை ஈட்டுவதற்கான முக்கிய கருவி இது. இந்தக் கருவி கவர்ச்சியான மற்றும் பரபரப்பான செய்திகளைப் பின்பற்ற மக்களைக் கட்டாயப்படுத்துகின்றன. இதனால்தான் மக்கள் எந்த ஒரு சம்பவத்திலும் 'கிசுகிசுவை' தேடுவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

சமூகத்தின் இந்தப் போக்கு குறித்த விழிப்புணர்வும் ஆய்வுகளும் இப்போது அவசியமாகின்றன. இது இப்படியே அனுமதிக்கப்படுமானால் தேர்தலை நெருங்கும் வேளையில் இதன் பாதிப்பை மக்கள் அதிகளவில் எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

# தலை கீழ்

## என் சத்திய மூர்த்தி

பெருந்தலைவர் சம்மந்தன் இறந்த உடனேயே, இல்லாத அவரது பதவியை யார் நிரப்புவது என்று தமிழ் அரசியல் தலைமைகளிடையே உள்குத்து தொடங்கிவிட்டது. இது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

சம்மந்தன் மறைந்தபோது, அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்று அறியப்பட்டார். ஆனால், கூட்டமைப்பின் முக்கிய அங்கத்துவ கட்சியான தமிழ் அரசு அதிலிருந்து கழன்று கொண்டு கன காலம் ஆகிவிட்டது. ஏன், சம்மந்தனே தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் மற்றும் முன்னாள் தலைவர்தான்.

என்ன, கூட்டமைப்பு கலைந்த பின்னர், தனது தலைமைக்கு அர்த்தம் இல்லை என்று சம்மந்தன் அறிவித்தார் இல்லை. அந்தக் காலகட்டத்தில் அவர் உடல்நலம் குன்றி, பெரும்பாலும் நாடாளுமன்ற அமர்வுகளில் இருந்து மருத்துவ விடுப்பு எடுத்திருந்ததும் இதற்குப் பிறிதொரு காரணம்.

பிற்காலத்தில் பொது வேட்பாளர் போன்ற பிரச்சினைகளில் அவர் தெளிவான அறிக்கைகளை வெளியிட்டதன் காரணமாக, கூட்டமைப்பு உடைந்தது பற்றி அவர் அறிந்திருந்தார் என்று நம்புவோமாக. அது போன்றே, பொது வேட்பாளர் குறித்த அவரது அறிக்கையும் அவராலேயே தயார் செய்யப்பட்டது என்றும் கருதலாம். காரணம், இது விடயத்தில், அதுதான் அவரது கருத்து என்பது பலரும் அறிந்ததே என்று கூறப்படுகிறது.

ஆனால், விடயம் அதுவல்ல. இல்லாத கூட்டமைப்பை இப்போது மீள் உருவாக்கி, அதன் நாடாளுமன்ற குழுவிற்கு, ரெலோ-வின் செல்வம் அடைக்கலநாதனை தலைவராக்க முயற்சி நடைபெற்றது. அவரே பின்னர், சம்மந்தனை போல், நாடாளுமன்றத்தின் வெளியிலும் கூட்டமைப்பின் தலைவராக செயல்படுவாரா, அல்லது, மாவை சேனாதிராஜா போன்ற 'மூத்த தலைவர்' ஒருவரை அந்த பதவியில் அமர்த்தி அழகு பார்ப்பார்களா, என்பது அப்போது கேட்கப்படாத ஒரு கேள்வி.

ஆனால், இதில் அடிப்படை விடயமே, கூட்டமைப்பு, பழைய பொலிவுடன் மீளுயிர் பெற்றிருக்குமா? என்பதுதான். அவ்வாறானால், அத்தகைய மீளுயிர்ப்பு நிகழ்விற்கு சம்மந்தன்தான் தடையாக இருந்தது போன்ற ஒரு உருவகம் தோற்றுவிக்கப்படுமே? அல்லது, சம்மந்தனின் நினைவை போற்றும் விதமாக, இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதாக அறிவித்திருப்பார்களா? என்றால், அவ்வாறு நிகழவில்லை.

### நெறிமுறை, வழிமுறை

இதனை அடுத்து, கூட்டமைப்பு உயிர்த்தெழும் நிகழ்வோடு சேர்ந்த நெறிமுறைகளும், வழிமுறைகளும் தான். குறிப்பாக, இரண்டாகவோ, பலவாகவோ பிரிந்துள்ள தமிழ் அரசு கட்சியின் முடிவு குறித்த விடயம். இப்போதே அந்த கட்சியின் தலைமை பொறுப்பிற்கான தேர்தல் முடிவுகள் திரிகோணமலை நீதிமன்றில் கேள்விகுறியாகி உள்ளது.

கட்சியில், கடந்த உள்கட்சி தேர்தலில் தலைவராக 'தேர்ந்தெடுக்கப்பட்ட' சிறிதரன், அந்தத் தேர்தலில் தோல்வி அடைந்த சுமந்திரன் ஆகியோர் தனித்தனியாக அணி சேர்த்து அரசியல் செய்து வருகிறார்கள். இருவருமே நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்களை விடுத்து, மூன்றாவதாக, கட்சிக்கு வெளியே உள்ள ரெலோ அமைப்பை சேர்ந்த செல்வத்தை தமிழ் நாடாளுமன்ற குழு தலைவராக தேர்ந்தெடுப்பதற்கு முன்னர், அவர்கள் இருவரது கருத்தும் கேட்கப்பட்டதாகத் தெரியவில்லை.

காரணம், திரிகோணமலை நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வரும்வரை, தமிழ் நாடாளுமன்ற குழு தலைமை, சிறிதரன் மற்றும் சுமந்திரன் தங்களுக்கு என்று அரசியல் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பு இருந்தது. அது இன்னமும் தொடருகிறது. இடைப்பட்ட காலத்தில், சிறிதரன் கட்சித் தலைவராகவும், சுமந்திரன் நாடாளுமன்ற குழுத் தலைவராகவும் செயல்படலாம் என்ற கருத்தும் நிலவியது.

அதனைத்தான், புதன் கிழமை தலைநகர் கொழும்பில் கூடிய இல்லாத கூட்டமைப்பின் நாடாளுமன்ற கூட்டத்தில் சிறிதரனே கூறியுள்ளார். தன்னை கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவிற்கு தலைவராக முன்மொழிந்து செல்வம் அடைக்கலநாதனுக்கு 'பிரேக்' போட்ட சிறிதரன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற புதிய அமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சியின் தலைவர் எவ்வாறு, பழைய கூட்டமைப்பின் தலைவராகலாம் என்று கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்வியில் இருந்த நியாயம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. குறிப்பாக, அதிக உறுப்பினர்கள் கொண்ட தமிழ் அரசுக் கட்சி தலைமைகள் கூடி பேசிய பின்னரே இது குறித்து முடிவு செய்யப்படும் என்ற சிறிதரனின் கருத்துக்கு சுமந்திரனும் ஆதரவு தெரிவித்தார். அடுத்த தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை, சம்மந்தனின் காலத்தை போன்றே, சுமந்திரன் அந்த பணிகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவார் என்றும் சிறிதரன் கூறியது குறிப்பிடத்தக்கது.

### சித்து விளையாட்டு

இதில் உண்மை என்னவோ, தமிழ் அரசுக் கட்சிதான் கூட்டமைப்பில் இருந்து விலகியதாக சுமந்திரன் அறிவித்தார். ஆனால், பிற கட்சியினரும் அந்தக் கூட்டமைப்பில் தொடராமல், சுரேஷ் பிரேமசந்திரன் வகையறாக்களை உடன் சேர்த்து புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொண்டார்கள்.

அந்த விதத்தில், உறுப்புக் கட்சிகள் இல்லாத காரணத்தினால், பழைய கூட்டமைப்பு அப்போதே செத்துவிட்டது. அதனைத் தொடர்ந்து, சம்மந்தன் தலைவராக தொடர்ந்ததெல்லாம், குறுகிவிட்ட தமிழ் அரசு நாடாளுமன்ற கட்சிக்கு மட்டுமே. என்ன, அனைத்து கூட்டமைப்பு அங்கத்துவ நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசு கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால், சட்ட ரீதியாக அவர்களும் அந்த கட்சியின் பிரதிநிதிகளே. அவ்வளவுதான்.

சிறிதரனை பொறுத்தவரை, கூட்டமைப்பு இல்லாத காலத்தில், தன்னை முன்னிறுத்தி தமிழ் அரசு கட்சியின் அரசியலை முன்னெடுக்க முயன்றார். ஓரளவு வெற்றியும் பெற்றார். ஆனால், இப்போது கூட்டமைப்பு என்ற இல்லாத ஒன்றிற்கு உயிர்கொடுத்து, அதற்குச் செல்வம் அடைக்கலநாதனை தலைவர் என்று அறிவித்திருந்தால், சிறிதரனின் தமிழ் அரசு பதவி இரண்டாம் பட்சமாக போய்விட்டிருக்கும்தானே! அது அவருக்கு ஏற்புடையதாக இருந்திருக்குமா?

இதில் கொடுமையே, மாவை சோனதிராசாவின் சித்து விளையாட்டுதான். பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலை ஆட்டிவிடுவது போல் அவர் பணியாற்றி வந்தார். தமிழ் அரசு கட்சியின் இடைக்கால தலைவராக வலம் வரும் அவருடைய ஒரே குறிக்கோள், சுமந்திரனை தமிழ் அரசியலில் இல்லாமல் ஆக்குவதுதான்.

அத்தகைய நிலைபாடு, சரியா- தவறா என்பதல்ல கேள்வி. மாறாக, ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால், என்று மாவை, சிறிதரனையும் செல்வம் அடைக்கலநாதனையும் எதிரும் புதிருமாக முடுக்கிவிட்டு அரசியல் செய்கிறாரோ என்று எண்ணத்தோன்றுகிறது. அதுவே, பின்னால், இரண்டு ஆடுகளுக்கு இடையே சிக்கிய குள்ள நரி கதையாக மாறிவிடக்கூடாது.

### கொசுறா, கொசுவா?

இவை எல்லாம், சிறிதரன், சுமந்திரன், செல்வம் மற்றும் மாவை ஆகியோரது தனிப்பட்ட அரசியல் வாழ்வு அல்லது தாழ்வு சார்ந்த விடயம் மட்டுமே. ஆனால், அவர்களுக்கு அப்பாலும் தமிழ் சமூகம் இருக்கிறது, தமிழ் அரசியல் களம் இருக்கிறது என்ற உண்மை அவர்களில் யாருக்குமே உறைக்கவில்லை.

ஏழு தசாம்சங்களுக்கும் மேலான தமிழ் அரசியல் பரப்பில், இவர்கள் அனைவருமே கொசுறுதான். அல்லது, வெறும் கொசுவா? இனப்போரை விட்டுத் தள்ளுங்கள். மிதவாத அரசியல் சரித்திரத்தில் இவர்கள் யாருமே, தலைப்பு என்று கூறவே முடியாது. மாறாக, அவர்கள் அந்தச் சரித்திரத்தில் அடிக் குறிப்பும் இல்லை.

தற்போது, ஏழு தசாப்த சமகால தமிழ் அரசியலில் கடைசி அத்தியாயம் காலம் சென்ற பெருந்தலைவர் சம்மந்தன்தான். அடுத்தடுத்து வரும் தலைமுறைகளில் வரும் இளம் தலைவர்கள், அந்த சரித்திரத்தில் தங்களை ஒரு பாகமாக மாற்றுவதற்கு அவர்களது வகிபாகம் என்ன என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், அவர்களது தலையெழுத்து மட்டுமல்ல, தமிழ் இனத்தின் தலையெழுத்தும் இல்லாமலாகிவிடும்.

அதன் பின்னர், பொது வேட்பாளராவது, தமிழர் ஒற்றுமையாவது... முன்னர், சம்மந்தன் காலத்தில், இனப்போர் முடிவுற்ற பின்னர், அரசுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தத் தொடங்கி, முன்னேறி வரும்போது, சிவில் சமூக அமைப்புகள் என்ற பெயரில் அக்கபோர் செய்த சிலர், அந்த பேச்சுக்களையே தோல்வி அடையச் செய்தனர். உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு மாறாக, போர் குற்றங்கள் என்ற புலம்பெயர்ந்தோரின் வலையில் விழுந்து, இன்று அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாக அது மாறி விட்டது.

இப்போதும், பொது வேட்பாளர் என்ற போர்வையில், சிவில் அமைப்புகள் முன்னெடுத்துள்ள முயற்சியில், பழமை வாய்ந்த தமிழ் கட்சிகள் சேர்ந்து கொள்வதாக கூறப்படுவது, தமிழர் அரசியல் எந்த அளவிற்கு பலகீனமாகி உள்ளது என்பதற்கு சான்று. வழமையாக, இது போன்ற முயற்சிகளில் அரசியல் கட்சிகள் முதலடி வைத்து அதற்கு தலைமைத்துவம் நல்கும்.

இன்று அது தலைகீழ். அதிலும் குறிப்பாக, நவகிரகங்களாக ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாத தமிழ் அரசியல் தலைவர்களை ஒரு சேர முயற்சிக்கும் முகமாக, முயல்வதாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் சிவில் சமூகம் அதற்கான அஜெண்டாவையும் தானே தயார் செய்து கொண்டு, பொது வேட்பாளர் என்ற கருத்தை ஆதரிக்கும் கட்சிகளுக்கு மட்டுமே அங்கு இடம் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம், என்று தெரியவில்லை.

இந்த விளக்கமே, விமர்சனமே, தமிழர்களில் தலையெழுத்திற்கும் எதிர்காலத்திற்கும் கூட பொருந்தும்.

# தேசிய வேலைத் திட்டம் தொடர்பாக சமூக பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டல்





(தில்சாத் பர்வீஸ்)

அரசாங்கத்தின் ஜனசபா தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சமூகமட்ட பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லமின் ஒழுங்குபடுத்தலின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள சமூகமட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலோடு இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம வளவாளராக சாய்ந்தமருதுபிரதேசசெயலாளர்எம்.எம் ஆஸீக்கலந்துசமூகமட்டபிரதிநிதிகளுக்கு ஜனசபா வேலைத்திட்டத்தின் நோக்கம், முக்கியத்துவம் மற்றும் இந்த வேலைத்திட்டம் தொடர்பாக சமூகமட்ட பிரதிநிதிகளின் செயற்பாடுகள் என்பவற்றை தெளிவுபடுத்தினார். (05)

# உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக இருவருக்குக் கிழக்கில் நியமனம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் மற்றும் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலய அதிபர் ஏ.எல்.அபுல்ஹஸன் ஆகியோர் புதன்கிழமை நியமனம் பெற்றுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை மூப்பு அடிப்படையிலான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் இருவரும் சித்தியடைந்தனர்.

அந்தவகையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளராக ஏ.எம்.எம்.தாஹிரும் கல்குடா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக ஏ.எல்.அபுல் ஹசனும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரால் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (05)




கிளிநொச்சியில்
ஜஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
◆ அன்பான வரவேற்பு
◆ தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
◆ இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
◆ இந்தியன் உணவுவகைகள்
◆ Online booking இற்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மூதூரில் காதலி சடமாக மீட்பு காதலன் சந்தேகத்தில் கைது



(எப்.முபாரக்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தில் உள்ள பாழடைந்தகிணறுஒன்றில்படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட தங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த யுவதியின்காதலனானபிரதானசந்தேக நபர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) மூதூர் நீதிமன்றின் முன்னிலைப் படுத்தப்பட்டபோதுஇன்றுவரைபொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரனை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில்கடந்தவெள்ளிக்கிழமைஆறு சந்தேக நபர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுகடந்தசனிக்கிழமை மூதூர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே குறித்த பிரதான சந்தேக நபரான படுகொலை செய்யப்பட்ட யுவதியின் காதலன் ஞாயிற்றுக் கிழமை மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை குறித்த யுவதியின் காதலன், காதலனின் தந்தை, சகோதரி அவரது வீட்டில் வேலை செய்தவர், உட்பட வாகன சாரதி இருவருமாக ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார்வினோதினி(வயது 25) என்ற யுவதி காணாமல் போயிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாழடைந்த கிணறு ஒன்றில் கல்லோடு கட்டி போட்டிருந்தநிலையில்சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இதன்போது அவருடைய ஆவணங்கள் அடங்கிய கைப்பை, உடைந்த தலைக்கவசம் என்பனவும் மீட்கப்பட்டிருந்தன.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது தலைப்பகுதிதாக்கப்பட்டுமண்டையோடு உடைந்திருந்ததாகவும், தலையின் பிற்பகுதியில் பாரிய துளை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காதலனின் வீட்டில்இருந்துதாக்குதலுக்குபயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரும்புக்குழாய் உட்பட சில சான்றுப் பொருள்களையும் மீட்டுள்ளனர். (05)

# பிங்கிரி கற்தூண் விகாரை அபிவிருத்தி குறித்து ஆளுநர் நஸீர் கண்காணிப்பு



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் செவ்வாய்க்கிழமை பிங்கிரிய கற்தூண் விகாரையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கண்காணிப்புச் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.



அசோகப்பேரரசின்போது இந்திய வணிகர்களால் இந்த விகாரை நிறுவப்பட்டது என்று புராண வரலாறுகள் மூலம் தெரிய வருகின்றது.

2300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த கோயில் இரண்டாம் பேதீஸ் மன்னரின் ஆட்சியின் போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் எஞ்சியுள்ள 206 களிமண்கோயில்களில் களிமண் சுவர்களைக் கொண்ட மிகப் பெரிய கோயில் இதுவாகும்.

தற்போது, ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விகாரைக்கு சொந்தமான நிலமானது, மன்னர் கால ஆட்சிகளின்போது தானமாகஅழிக்கப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியின்போது 1864 ஆம் ஆண்டு குறித்த நிலங்களின் உரிமை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது இந்த விகாரையின் பாதுகாப்பு, தொல்லியல் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருவதுடன், எதிர்காலத்தில் உள்ளூர் சுற்றுலா நடவடிக்கைகள், அருங்காட்சியகம் அமைக்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் பார்வையிட்டதுடன், விகாரையின் வரலாறு மற்றும் அங்கு புதையுண்டு கிடக்கும் புராதன மதிப்புகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் விகாராதிபதி ராஜகீய பண்டித படிவெல சோரத தேரரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஆலயத்தின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளுக்கு தனது பூரண ஆதரவை வழங்குவதாகவும் ஆளுநர் அவர்கள் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இந்திய பௌத்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (05)



## தேனில் கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணியிலேயே அது தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. உண்மையில் அரசமைப்பில் முரண்பாடான நிலை இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. சிங்களத்தில் ஒரு பழமொழி இருக்கிறது, அதாவது தேனில் கை வைத்தவர் விரல்களை சுவைக்காமல் இருக்கமாட்டார் என்று. அதனால் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர், அதில் தொடர்ந்து இருப்பதற்கு தேவையான சூட்சுமங்களை தேடிக்கொண்டிப்பதே இந்த நாட்டில் இருக்கும் பிரச்சினை.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் உண்மையில் யாருக்கு வேண்டுமானாலும் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். அரசமைப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அமைச்சரவைக்கு முரண்பாடு இருந்தாலும், உயர் நீதிமன்றம் அது தொடர்பில் 3 தடவைகள் உறுதிப்படுத்தி இருக்கிறது. அப்படியானால் அந்தத் திருத்தத்தைக் கொண்டுவர ஆளும் தரப்பு ஏன் அவசரப்படவேண்டும்.

உயர் நீதிமன்றல் இது தொடர்பில் வழக்கு தொடுத்தது யாருடைய தேவைக்கு என்பது அனைவருக்கும் தெரியும், ஆனால் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு பின்னர் அது வெளிப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் 3 தடவைகள் உறுதிப்படுத்தி பின்னரும் அமைச்சரவையில் இது தொடர்பில் ஏன் அவசராமாக தீர்மானம் மேற்கொள்ளவேண்டும் என கேட்கிறேன். அதனால் இதற்கு பின்னரல் மறைமுகமான வேலைத்திட்டம் இருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுந்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் இருக்கும் ஒருசிலருக்கு தங்களின் கிராமங்களுக்குசெல்லமுடியாதநிலை இருக்கிறது. அதேபோன்று அடுத்த தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாது என்றுநினைப்பவர்கள் இருக்கிறார்கள். அதனால் நாடாளுமன்ற தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பிற்படுத்திக்கொள்ள முடியுமானால் இவர்களுக்கு அது மகிழ்ச்சியாகும்.

அதனால் ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் இந்தத் தேவை இருக்கிறது. அதனை மேற்கொள்ளவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

# மட்டு. வேலையற்ற பட்டதாரிகள் 9ஆவது நாளாகப் போராட்டம்

நாங்கள் போராடுவதை பார்த்தும் எங்களது நிலையைக்கண்டும் எமது எதிர்கால சந்ததியனருக்கு கல்வியைக்கற்பதில் அச்சநிலையேற்பட்டுவருவதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமதுதொழில்உரிமையைவலியுறுத்திமட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் முன்னெடுக்கும் போராட்டம் 09 ஆவது நாளாக புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஒன்றுகூடிய பட்டதாரிகள் காந்திபூங்கா முன்பாகவுள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அழிக்காதே அழிக்காதே எதிர்காலத்தை அழிக்காதே, பட்டதாரிகள் வீதிகளில் நின்றால் நாடு முன்னேறுவது எவ்வாறு?, பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்? போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமது தொழில் உரிமையினை வலியுறுத்தும்வகையிலானகோசங்கள்எழுப்பப்பட்டதுடன் தமது போராட்டம் தொடர்பிலான பல்வேறு கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

எமது போராட்டம் தொடர்பில் இதுவரையில் எந்த அதிகாரிகளும் கவனத்தில் கொள்ளவில்லை. நாங்கள் மிகவும்கஷ்டங்களுக்குமத்தியில்எமதுபட்டக்கல்வியைப் பூர்த்திசெய்தது வீதிகளில் போராடுவதற்காகவா என பட்டதாரிகள் இதன்போது கேள்வியெழுப்பினார்கள்.(05)








காலைக்கதிர் Kalaikkathir




# ஆடிப்பிறப்பு



ஆடிப்பிறப்பு சைவத் தமிழ் மக்களினால் ஆடி மாத முதலாம் நாள் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலமாகும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். அடுத்து சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலமாகும். இது தேவர்களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் தொடக்க தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. இந் நாளில் ஈழநாட்டுத் தமிழ் மக்கள் ஆடிக்கூழ் கொழுக்கட்டை என்னும் உண்டிவகைகளை விசேடமாகச் செய்து குடும்ப விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தலும் உற்றார், உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணலும் வழக்கமாகும்.

அதாவது தட்சணாயண காலத்தின் தொடக்க தினம் (இன்று) ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலத்தில் கோடைகால வெப்பம், காண்டாவனம் உட்பட, வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் வளர்கின்றது. இக் காலத்திலேயே விதை விதைத்தல், மரங்கள் நடுதல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்த மானந்தம் தோழர்களே! கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே! இப்படி ஈழத்துகவி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிப்பிறப்பு பற்றி பாடியிருக்கிறார்.

ஒரு வருடத்தில் உள்ள மாதங்களிலேயே மிகவும் சிறப்பு பெற்ற மாதம் ஆடி மாதம் ஆகும். கடும் கோடை வெயிலால் வாடி போயிருக்கும் மக்களுக்கு இதமான காற்று, மழை என தரக் கூடிய மாதமாகும். ஆடி மாதம், தட்சணாயன காலத்தின் ஆரம்பமாகவும் அமைகிறது. ஆடி மாதம் முதல் மார்கழிவரைதட்சணாயனகாலமாகும்.

தட்சணாயன காலத்தில் சூரியன் தெற்கு திசையில் தனது பயணத்தை துவக்குவார். இந்த காலத்தில் மக்கள் புண்ணிய நதிகளில் புனித நீராடுவது மிகவும் விசேஷமாகும். ஆடி மாதத்தில் தான் கிராம தெய்வங்கள், காவல்தெய்வங்களுக்குவிழாஎடுத்துகொண்டாடுவார்கள். இது நோய் அதிகம் பரவும் மாதம் என்பதால் கூழ் ஊற்றியும்த மிக கட்டுப்பாடுகளுடன் விரதம் இருந்தும் தங்களை காத்துக் கொள்கின்றனர்.

**தெய்வேந்திரம் வஜிதா**

# தேனான திருவாசகத்தை செப்பி நின்றார் வாதவூரர் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்**
**அவுஸ்திரேலியா**

பக்தி இலக்கியம் என்னும் பொழுது அது எங்கள் தமிழ் மொழிக்கே வாய்த்திருக்கிறது. ஏனைய மொழிகளில் பக்திக்கு என்று தனியான இடம் கொடுத்து – அதனை இலக்கியமாய் ஆக்கவே இல்லை. அதற்கான முக்கியத்துவத்தையும் வழங்க வில்லை என்பதை மனமிருத்துவது அவசியமாகும். பக்தி இலக்கியத்தின் முன்னோடிகளாய் விளங்கும் – காரைக்கால் அம்மையார் , சம்பந்தர் , அப்பர் , சுந்தரர் , பின்னேதான் வாத வூரார் வருகின்றார். ஏனையவர்கள் பக்தி என்னும் வழியில் பயணப்பட்டவர்களே.அவர்கள் காலம் , அவர் கள் சூழல் , அவர்களின் வழியினை வகுத்துக் கொடுத்தது எனலாம். அவர்கள் அனைவருமே பக்தியின் உச்சத்தைத் தொட்டவர்களே ஆவர். இதில் எந்தவித கருத்துக்கும் இடமில்லை. ஆனால் அவர்களின் பின்னே வந்த வாதவூர் வண்டின் இறை அனுபவமும் , பக்தியின் நிலையும் , அதனால் வெளிவந்த பக்திப் புதைய ல்களும் சற்று வித்தியாசமானதாக அமைந்தது எனபதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

தேனை நாடி வண்டுகள் ஓடும்.தேனைச் சுவைப்பதில் வண்டுகளுக்கு பேரானந்தம். இந்த வண்டு மற்றைய வண்டுகள் போன்ற தன்று.இவ் வண்டு திரு வாதவூரில் இருந்து வந்த வண்டு. ஏனைய வண்டுகள் பல மலர்களையும் நாடி நிற்க – வாதவூர் வண்டு; வேத உபநிடதங்களை நாடி அங்கு திருவாசகம் என்னும் உய ரிய தேனைப் பருகி எமக்கெல்லாம் வழங்கி இருக்கிறது.அந்த வண்டு வழங்கிய தேனான திருவாசகம் – தொட்டாலும் இனிக்கும்.கேட்டாலும் இனிக்கும். படித்தாலும் இனிக்கும்.சொல்லச் சொல்ல இனிக்கும் சொற் களால் ஆனதுதான் அந்த வாசகம் ‘ திருவாசகம் ‘. இதனால்த்தான் ‘திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவா சகத்துக்கும் உருகார் ‘ என்று பலரும் வியந்து போற்றும் நிலை அமைந்து விட்டது. அது மட்டும் அல்ல – திரு வாசகத்தைத் தமிழ் வேதமாகவும் கொள்ளலாம். வடமொழியில்தான் வேதங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ் வேதம் திருவாசகந்தான் என்பதை யாவரும் மனமிருத்துவது அவசியமாகும்.

திருவாதவூரில் பிறந்தபடியால் திருவாதவூரர் என்றும் , மணிமணியானவார்த்தைகளைவழங்கியதால்மணிவாசகர் என்றும்,அவரின்ஒவ்வொருவார்த்தைகளும்சைவத்துக்கும் , தமிழுக்கும் மாணிக்கமாய் அமைந்தமையால் மாணிக்கவாசகர் என்றும் யாவராலும் பெருமதிப்புடன் அழைக்கப்பட்டார்.அது மாத்தி ரம் அல்ல – சைவத்துக்கும் , பக்திக்கும் , தமிழுக்கும், என்றுமே ஒளிவிடும் மாணிக்கமாய் அவர் திகழ்கின்றமையாலும் மாணிக்க வாசகர் ஆகியே நிற்கிறார்.

அந்தண குலத்தில் பிறந்து, பேராளுமை மிக்கவராய் விளங்கினார் மணிவாசகப் பெருமான் என்று அவ ரைப்பற்றி திருவாதவூரடிகள் புராணம் வாயிலாக அறிகின்றோம். மணிவாசகப் பெருமானின் ஆளுமை யினை அவர் வாழ்ந்த பாண்டி நாட்டின் அரசன் – அரிமர்த்தன பாண்டியன் அகத்தில் இருத்தி அவரை தனது அரசாட்சியில் முதலமைச்சர் ஆக்கினான். அத்துடன் அவரின் ஆற்றல்களை மெச்சி ‘ தென்னவன் பிரம்மரா யன் ‘ என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினான்.

தென்னவன் பிரமராயன் என்றருள் சிறந்த நாமம்
மன்னவர் மதிக்க நல்கி வையகம் உய்வதாக
மின்னவ மணிப்பூணாடை வெண்மதிக்கவிகைதண்டு
மொன்னவர் கவிரி வேழமளித்தனன் பொருநை நாடன்
(திருவாதவூரடிகள் புராணம்)

வாதவூராரினை தனது அகத்தில் ஏற்றிய மன்னவன் – மற்ற மன்னவர்களும் மதிக்கும் வண்ணம் ,அவருக்கு நன்மதிப்பினைக் கொடுத்தான். நவரெத்தினாலான ஆபரணங்கள், பட்டுப் பீதாபரங்கள் , சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடை, முத்திலான சிவிகை, பொன்னாலான காப்பு , சாமரை, யானை என்று அளித்து ஆனந்தம் அடைந்தான். என்று வாதவூரடிகள் புராணம் சுட்டிக் காட்டி நிற்கிறது.

அதிகாரம் மிக்க பதவி ! அரசனின் அன்பும் ஆதரவுமான நிலை! எதையும் செய்யும் இருப்பிடம் ! இவை எவையையும் வாதவூரர் உள்ளம் பெரிதாக ஏற்றுக் கொண்டதாகவே தெரியவில்லை. புகழும் , ஆடம்பரங் களும் நிலையாய் இருக்க மாட்டா என்னும் நினைப்பால் நிலையாயிருக்கும் அப்பரம் பொருளையே அவர் நாளும் பொழுது எண்ணியபடி அமைச்சர் என்னும் பெயரில் பாண்டியன் அவையில் இருந்தார் எனலாம்.

‘ ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் ‘ எண்ணமே அவருள்ளத்தில் ஆழமாய் ஆணிவேராய் இருந்தது எனலாம். பற்றுகளைப் பற்றாதிருந்தார். பற்றுகளைப் பார்க்காதிருந்தார். தாமரை இலைத் தண்ணீராய் இருந்தார். பதவியும் அந்தஸ்த்தும் பட்டமும் தன்னை நெருங்க விடாதவராய் இருந்தார் என்பதைவிட வாழ்ந்தார் என்பதே மிக மிக பொருத்தமானதாகும்.

அமைச்சராய் அமர்ந்த படியால் அரசன் கட்டளையினை ஏற்று நடக்கும் நிலையும் உருவாகியது. திருப்பெருந்துறையில் நல்ல அரோபியக் குதிரைகள் வந்திருப்பதாயும் அதனைப் பார்த்து வாங்கி வரும்படியும் திரவியங்களை அரசன் அமைச்சரான வாதவூரரிடம் கொடுக்கிறான். அமைச்சரான வாதவூரரும் குதிரைகளை வாங்குவதற்கு செல்கிறார். அங்கு அவர் குருந்தமர நிழலில் ஒரு ஆனந்தப் பேரொளியினைக் காணுகிறார். தன்னை மறக்கிறார். தான் வந்த பணியை மறக்கிறார். அந்த ஞான ஒளியுடை மகானின் திருவடியில் சங்கமம்

தொடர்ச்சி மறுபக்கம்…………

காலைக்கதிர் Kalaikkathir

# தேனான திருவாசகத்தை செப்பி நின்றார் வாதவூரர் !

முன் பக்க தொடர்ச்சி...........

ஆகிறார்.இதைத்தான் பிறவிப் பயன் என்பதோ என்று எண்ணிட வைக்கிறதல்லவா ! நல்வினை தொடர்ந்தால் நல்லதே நடக்கும்.வல்வினை அறுந்து வாழ்வது சிறக்கும்!

குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் நீண்டநாள் வராதபடியால் அரசன் தூதுவர்களை அனுப்பி நிலைமையினைப் பார்த்துவருமாறு பணிக்கிறான். சென்ற தூதுவர்கள் வாதவூரரின் நிலையினை மன்னனிடம் தெரிவிக்கவே மன்னவன் அடங்காச் சினங் கொள்ளுகிறான்.சினத்தால் வாதவூரருக்குத் தண்டனை கொடுக்கிறான்.

அமைச்சராய் இருப்பவர் பொறுப்பின்றி நடப்பது முறையா ? அரசன் குதிரைகள் வாங்கக் கொடுத்த பொருளைஎல்லாம்அறப்பணிகள்ஆற்றிடசெலவழித்தமை ஏற்கத் தகுந்ததா ? கடமையை , பொறுப்பை தட்டிக் கழிக்கலாமா ? என்றெல்லாம் கேழ்விகள் எழுகின்றன அல்லவா ! அரசன் என்பவன் – இன்னார் , இனி யார் என்று பாராமல் நீதி வழங்குதல் முறைதானே. தனது கட் டளையினை உதாசீனம் செய்த வாதவூரருக்குத் தண்டனை வழங்கியதை எப்படிக் குற்றம் என்று எடுத்துக் கொள்ளுவது. இது ஒரு சிக்கலான கட்டம். அர சன் மனநிலை அமைச்சரான வாதவூரரிடம் இருக்கவே இல்லை. அரசன் இவ்வுலகில் இருந்தான். ஆனால் அமைச்சரான வாதவூரர் இவ்வுலகை மறந்தார். அவருக்கு முன்னே ஆண்டவன் பேருவே தென்பட்டது. ஆண் டவன் அருட் கடலினுள் அமிழ்ந்தே விட்டார். அதனால் குதிரை வாங்க வந்ததோ , தான் பாண்டிய மன்னனின் அமைச்சரோ என்பதை யெல்லாம் அவர் மறந்தே விட்டார். கூட வந்தவர்கள் திகைத்தனர். மீண்டும் மீண்டும் வந்த பணியை இடுத்துரைத்தனர். அப்பொழுதான் தன்னிலைக்கு வந்த வாதவூரர் வந்த வேலையினை மன ங்கொண்டார். உலகினை மறந்திருந்த வாதவூரர் அந்தப் பரம்பொருளிடம் அடைக்கலமாகிறார். அடியவனுக்கு ஆண்டவன் அருளினான்.

ஆண்டவனின் ஆணைப்படி – ' ஆவணி மூலத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்த குதிரைகள் வரும் என்று ' அர சனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற வாதவூரர் மொழிகின்றார். குதிரைகளும் குறிப்பிட்ட நாளில் வரு கின்றன. அரசன் வாதவூரரிடம் மன்னிப்புக் கேட்கின்றான். ஆனால் வந்த குதிரைகள் அனைத்துமே அன்றி ரவு நரிகளாய் மாறிவிட்டன. அரசன் ஆத்திரம் மேலோங்குகிறது. வாதவூரரை சிறையில் அடைக்கின்றான் . உயரிய பதவியைக் கொடுத்த அரசனே அவரை திரவியங்களை அபகரித்த குற்றவாளியாக்குகிறான். வாத வூரர் துன்பம் படைத்தவனுக்குப் பொறுக்கவில்லை . வைகை ஆறு பெருக்கெடுக்கிறது. அரசன் திகைக்கி றான். பெருகிவரும் நீரைத்தடுக்க நாட்டுமக்களுக்கு அரசன் ஆணையிடுகிறான்.

பலரும் தமக்கான பங்கினை செய்கிறார்கள். ஆனால் பிட்டவித்து பிழைப்பு நடத்தும் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டிக்கு உதவிட யாருமே இல்லாதிருந்தது. அவ்வேளை எம்பெருமானே வேலையாளாய் வரு கிறார். ஒழுங்காய் வேலை பார்க்காத காரணத்தால் அரசனின் காவலர்கள் பிரம்படிக்கு ஆளாகிறார் ஆதி அந்தமில்லா அந்த அரும்பொரும் ஜோதி.

பரம்பொருளின் முதுகில் விழுந்த அடி அரசனின் முதுகில் விழுந்தது. அனைவருக்கும் விழுந்தது. அரசன் தனை மறந்து தவறை உணர்ந்து தண்டனிட்டு வணங்கினான். என்ன நல்ல கதையாக இருக்கிறதா ! இது கதை அல்ல வாதவூரர் வரலாற்றில் இவற்றைக் காணுகிறோம்.

முதலில் அரசன் வாதவூரருக்குத் தண்டனை வழங்கிச் சிறைப்படுத்தி துன்பத்துக்கு ஆழாக்கிய வேளை ஆண்டவன் ஏன் தடுக்கவில்லை? இரண்டாந்தரம் தண்டனை கொடுத்த பொழுது – வைகை ஆற்றினைப் பெருக் கெடுக்கெடுக்கச் செய்து, பாண்டிய நாட்டினையே கதிகலங்கச் செய்து, தானே கூலியாளாய் வந்து, பிட்டுக்காய் மண் சுமந்து பிரம்படி வாங்கியதும் ஆச்சரியமாய் தோன்றுகிறதல்லவா ? பொறுப்பின்றி நட ந்ததால் வாதவூரருக்கு கிடைத்த முதல் தண்டனையை ஆண்டவன் பொருத்தமானது எனக் கருதியதால் எது வுமே செய்யாதிருந்திட்டான். இரண்டாந்தரம் தனது அன்பனுக்கு வழங்கிய தண்டனை ஏற்றதல்ல என இறை வன் கருதியதால் இப்படியாய் ஆகியதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது அல்லவா! அடியவன் வருந்தி னால் ஆண்ட வன் அணைத்திட வந்திடுவான் என்பதே இதன் தத்துவம் எனக் கொள்ளலாம் அல்லவா !

கல்லால் ஒருவன் அடிக்க உடல் சிலிர்க்க
காலில் செருப்பால் ஒரு வேடன் வந்தே உதைக்க
வில்லால் ஒருவன் அடிக்க
வீசி மதுரை மாறன் பிரம்பால் அடிக்க
தந்தை தாய் இருந்தால் உலகத்தில் உமக்கிந்த
தாழ்வெல்லாம் வருமோ ஐயா

என்று ஒரு பக்தர் பாடுவதாய் அமைந்த பாடலை இவ்வேளை நினைவில் வைப்பது பொருத்தமாய் இருக்கும் அல்லவா ?

முதுகில் அடிவிழுந்ததும் அரசனுக்கு ஆணவம் அகன்று தெளிவு பிறந்தது. வாதவூரருக்கு பலவகையில் உதவிட அரசன் முன்வந்தான். ஆனால் வாதவூரரோ தாம் துறவறத்தையே நாடுவதாகக் கூறினார். அரசனும் வாதவூரர்வழியினைப்பெருவழியெனஏற்றுக்கொண்டான்.

மனிதன் என்பவன் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்கும் பொழுது அத்துறைக்கு ராஜன் ஆகிறான். பாண்டிய மன்னன் அவையில் அமைச்சர் ஆனதால் வாதவூரர் புவிராஜனாகிறார். தித்திக்கும் திருவாச கத்தை அளித்ததமையால்கவிஜாரன்ஆகிறார். அவரின்பக்தியுடை வாழ்வால் அவர் தவராஜனாகிறார். பல சிறப்புக்களைப் பெற்ற வாதவூரர் நிறைவில் நடராஜனுக்கே உரியவராய் திகழ்கிறார் எனலாம்.

வாதவூரர் வண்டாய் பறந்தார். அந்த வண்டு ' திருவாசகம்'என்னும்தேன் கூட்டையும்'திருக்கோவையார் 'என்னும் தேன் கூட்டையும் கட்டி நாமனைவரும் நாளும் பொழுதும் வேண்டிய தேனைப்பெற்று சுவைத்திட வழி சமைத்திருக்கிறது எனலாம்.

உடையாள் உந்தன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே

என்னும்வேண்டுகளைவாதவூர்வண்டு இறைவனிடம் சொல்லுகிறது.இது தெவிட்டாத் தேனாகி இனிக்கிற தல்லவா !

திருவாசகமென்னும் தேன் பருகினார் ஒரு அடியவர். அவரால் தனது உணர்வினை வெளிப்படுத்த சொற்க ளைத் தேடுகிறார்.அவர் தேடியதை அளிக்கிறார் பருகுவோம் வாருங்கள்..

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

– இப்படிச் சுவைத்தவர்தான் வள்ளல் பெருமான்.

வாதவூர் வண்டு மலர்கள்தோறும் எடுத்தவந்த தேனால் ஆக்கப்பட்ட திரு வாசகத்தை தமிழர்களாகிய நாம் மட்டும் சுவைத்து மகிழ்வது பெருமைதான். ஆனால் தமிழ் அறியா ஒருவர் , எங்கள் சைவம் சாரா ஒருவர், அதுவும் ஆசிய நாட்டைச் சேராத ஒருவர்,ஆங்கில நாட்டை சேர்ந்த ஒருவர் கிறீத்தவ பாதிரியாரானவர் திருவாசகமென்னும் தேனைத் தொட்டதும் தன்னை மறந்தார். அந்தத் தேன்கூட்டுக்குள்ளேயே புகுந்து தேனை மாந்திக் கொண்டே இருந்தார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா !

சிவனை முழுமுதற் கடவுளாகப் பாடி உருகிடும் திருவாசகம் என்னும் தேன் – ஒரு கிறீத்தவ அருட் தந்தையை எப்படிக் கவரமுடியும்? இது ஒரு முரண்பட்ட நிலையாகத் தெரிகிறது அல்லவா ! இறைவன் என்பவன் ஒருவனே. திருவாசகத்தில் 'சிவனாக' காட்சியளிக்கும் ஆண்டவன்தான் – பரமண்டலத்தில் வீற்றிருக்கும் பிதாவாக கிறீத்தவ அருட்தந்தை ஜி.யூ போப் அவர்களின் உள் ளத்தில் பதிந்திருக்கலாம். இதனால் அவர் ஆங்கிலத்தில் திருவாசகத்தேனை மொழிபெயர்த்து அனைவருமே பயனுறச் செய்தார் எனலாம்.இலண்டன் மாந கரில் கிறீத்தவ தேவாலயத்தில் முழந்தாளிட்டு செபம் செய்யும்வேளை' தன்னருகில் மாணிக்கவாச கரும் செபம் செய்வதாக ' தான் உணர்ந்ததை – திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் பதிவிட்டுள்ளார் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.இதுவே சமயங்கடந்த பக்தி நிலை எனலாம்.இதனை வாதவூர் வண்டின் ' திருவாசகம் என்னும் தேன் ' செய்திருக்கிறது. மணிவாசகரின் இரக்கமும் , உருக்கமும் , தன்னை மிகவும்கீழாயும், இறையே எல்லாவற்றுக்கும் மேலாகவும் , எண்ணி நின்று திருவாசகம் என்னும் தெவிட் டாத் தேனைத் தந்த பாங்கே மாற்று மதத்தவரான கிறீத்தவ பாதிரியாரையும் உருக வைத்ததது , திருவாச கத்தைப் பருக வைத்தது எனலாம். இஸ்லாமிய அன்பர்கள் கூட திருவாசகத்தை நேசிக்கிறார்கள். அதன் உருக்கப் பார்வையினை உள் வாங்குகிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது. திருவாசகம் என்னும் அரிய பொக்கிஷம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் கருத்திருதுவது அவசிய மானதாகும்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க

என்று இறைவனுக்கே வாழ்த்துக் கூறுகிறார் வாதவூர் வள்ளல் அவர்கள். வாழ்த்துக் கூறியவர் யாவருக்கும் நல் வழியாய் , நல் அறிவுரையாய் எம்மையும் நாளுமே இறைவனை வாழ்த்திப் பாடுங்கள் என்று முன்மா திரியாய் விளங்கு கின்றார் அல்லவா !

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீங்கும் !
அல்லல் அறுபடும் ! ஆனந்தம் பெருகும் !
அத்துடன் மருவா நெறியும் அளிக்கும் !

எது தெரியுமா ' திருவாசகம் என்னும் தேன் ' . இது வெறும் கூற்று அன்று , ஆன்மீகத்தின் உச்சம் ! ஆன்மீக வழி நடப்பார்க்கு அருங்கலம் ! தத்துவத்தின் உயர் தத்துவம் ஆகும் என்பதே மிக மிகப் பொருத்தமாகும்.

திருவாசகம்என்னும்பொக்கிஷம்தமிழில்அமைந்ததால் தமிழுக்கே மிகப் பெருமை எனலாம். தத்துவத்து க்குத் தத்துவமாய் அமைகிறது. இலக்கிய இன்பங்களை அளிக்கும் இன்னமுதாயும் அமைகிறது. சொற் சுவை மிக்கது. பொருட்சுவை மிக்கது.கற்றவர்க் கெல்லாம் கருத்துக் கருவூலமாகவும் திகழ்கிறது. பாடுவார் க்குப் பரவசத்தை அளிக்கிறது. படிக்கப் படிக்க சுவையாய் தேனாய்தித்திக்கிறது. மூவரின் திருமுறைகள், ஆழ்வார்கள் அருள்மொழிப் பாடல்கள், பொருள் பொதிந்தவைதான். சொற்சுவை , பொருட் சுவை, பக்தி , தத்துவம் , இரக்கம் , கருணை , அத்தனையும் நிறைந்தவைதான். ஆனால் வாதவூர் வள்ளல் மணிவாசகப் பெருமான் அளித்த ' திருவாசகம் 'என்னும் தேன்தான், உயர்ந்தோங்கி நிற்கிறது என்பதை மறுத்துரைத்து விடல் இயலாது. ஆளுமைகள் அனைவருமே மேற்கோள் காட்ட தேடும் இடமும் , நாடும் இட மும் வாதவூர் வள்ளலின் ' திருவாசகத்தேனையே ஆகும் ' . திருவாசகம் என்பது எமக்கெல்லாம் ஏன் இந்த மாநிலத்துக்கே வாய்த்திட்ட பெரு வரமே ஆகும். அந்த வரத்தை எமக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வழங்கிய வாதவூர் வள்ளல் மணிவாசகப் பெருமானை ஏற்றுவோம் போற்றுவோம் இதயத்தில் இருத்துவோம். நாளும் பொழுது ம் திருவாசகத்தை ஓதுவோம். உள்ளொளி பெருக்குவோம். உயர் நிலை எய்துவோம்.

வாதவூர் அடிகளார் வளங்கிய வாசகத்தை
ஆழமாய் அகமிருத்தி அனைவரும் ஓதுவோம்
காதலாய் அணுகுவோம் கனிவுடன் பாடுவோம்
கண்ணுங் கருத்துமாய் எண்ணியே போற்றுவோம்

செந்தமிழ்த் தேனாக வந்த திருவாசகத்தை
சந்தததும் ஓதுவோம் சந்ததி தளைத்தோங்கும்
அந்தமில் ஆனந்தம் அகமெலாம் ஊற்றெடுக்கும்
அரனாரே விரும்பிய ஆனந்தத்தேன் திருவாசகம்

கற்கண்டாய் தேனாய் கரும்பின் சாறாய்
ஷதித்திக்க தித்திக்க திருவாசக மீந்த
பக்தி வழிசென்ற பரமனின் அடியார்
வாதவூர் பிறந்தாரை மனமாரப் போற்றுவோம்

(–ஜூலை 9 திருவாதபூரரின் குருபூசை தினம்)

# முஹர்ரம் புது வருட தேசிய நிகழ்வுகள்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் இஸ்லாமிய புதுவருட நிகழ்வு கொழும்பு கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கொழும்பு இஹ்ஸானிய்யா மதரஸாவின் அதிபர் அஷ்ஷேக் பாரூத் இஸ்லாமியப் புதுவருட முஹர்ரம் சிறப்புகள் குறித்து தமிழ் மொழியிலும் கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலை மாணவன் ஸமீம் நசார் சிங்கள மொழியிலும் உரையாற்றினர்.

கொம்பெனித் தெரு அஹதிய்யாப் பாடசாலையின் கஸீதா குழுவினர்களால் கஸீதா பாடப்பட்டது.

கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் ஸப்ரி ஜுனுஸினால் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஏ.எம்.ஹேரத் கிருலப்பனஜும்ஆப்பள்ளிவாசலின் பிரதித் தலைவர் இம்தியாஸ் முஸ்தபாவினால் நினைவுச் சின்னம் வழங்கியும் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம்.ரிப்லான் பள்ளிவாசலின் தனதிகாரி ஸகீர் மர்ஸூக்கினால் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

கிருலப்பன ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர் அல்ஹாஜ் சப்ரி யூனுஸினால் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அல் ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸி, திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர்களான எம்.எஸ். அலா அஹமட், என்.நிலூபர், இலங்கை வக்ப் சபையின் உறுப்பினர்கள், ஹஜ் குழுவின் உறுப்பினர்களான இஷாக் ஹனிபா, இஃபாஸ் நபுகான் , கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், திணைக்கள நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் அஷ்ஷேக் முப்தி முர்சி உட்பட உலமாக்கள் மற்றும் திணைக்களத்தின் அதிகாரிகள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், ஊர் ஜமாஅத்தினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)




காலைக்கதிர் Kalaikkathir

# பருத்தித்துறை நகரசபை முன்னாள் நகரபிதா விபத்தில் சிக்கி இறப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகரசபையின் முன்னாள்நகரபிதாவிபத்தில்சிக்கிபடுகாயமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (வியாழக்கிழமை) உயிரிழந்துள்ளார்.

முன்னாள் நகரபிதாவான வேலுப்பிள்ளை நவரத்தினராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி முல்லைத்தீவு நோக்கி மோட்டார்சைக்கிளில்பயணித்துக்கொண்டிருந்தபோது புளியம்பொக்கணை பகுதியில், பாதுகாப்பற்ற நிலையில் வீதியில் அமைக்கப்பட்ட சிறு மேட்டில் (பம்மிங்) மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். அதன் பின்னர்,



மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.(05)

# முல்லை. ஏ-9 வீதியில் விபத்து: ஒருவர் சாவு; மூவர் படுகாயம்



முல்லைத்தீவு ஏ9 வீதியில் திருமுறிகண்டிக்கும்கொக்காவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வியாழக் கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுஅதிகாலைகொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹை-ஏஸ் ரக வாகனம் முன்னே சென்றுகொண்டிருந்த பாரஊர்தியுடன் மோதியதில்இந்தவிபத்துஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசென்று சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மாங் குளம் பொலிஸார் விசாரணைக ளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(05)

# இலங்கையை சேர்ந்த பெண்பயணி ஒருவர் நடுவானில் பரிதாப இறப்பு

## கராச்சி விமானநிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கம்

இலங்கையை சேர்ந்த பெண்பயணியொருவர் நடுவானில் உயிரிழந்துள்ளமையைத் தொடர்ந்து பயணிகள் விமானமொன்று அவசர அவசரமாக பாகிஸ்தானின் கராச்சி விமானநிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இலங்கையை சேர்ந்த 57 வயதான பலவினி என்றபெண்ணே உயிரிழந்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

டுபாயிலிருந்து கொழும்பிற்கு பயணித்துக் கொண்டிருந்த விமானத்திலிருந்த குறிப்பிட்ட பெண்பயணியின் உடல்நிலை திடீரென மோசமடைந்ததாகவும் இதனைத் தொடர்ந்து விமானி கராச்சி விமானநிலையத்தில் விமானத்தை தரையிறக்குவதற்கான வேண்டுகோளை விடுத்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(05)

# ஆபத்தான நிலையில் காணப்படும் பாலத்தால் பொது மக்கள் அச்சம்



(எம்.எப்.றிபாஸ்)

சாய்ந்தமருதுபழையவைத்தியசாலைவீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் அந்த பாலத்தில் பயணிப்போர் அச்சத்துடனே பயணித்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை, உப தபாலகம், பாடசாலை , வணக்கஸ்தலங்கள் மற்றும் தொழில் நிமித்தமான பயணங்களை மேற்கொள்வோர் இந்த பாலத்தின் வழியே பயணிக்கின்றனர்.

எனவே அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியாக விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.

இருப்பினும் இந்த பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இந்த பிரச்சினைக்குதீர்வைதருவதாகதேர்தல்காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் தமக்கான உச்சகட்ட அதிகாரத்தை பயன்படுத்தி இந்த பிரச்சினைக்குதீர்வைவழங்கமுன்வரவேண்டும்என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சள் பொதிகளுடன் இருவர் கைது



இந்தியாவிலிருந்துசட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட உலர்ந்த மஞ்சள் பொதிகளுடன் கடற்படையினரால் இரண்டுபேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொதிகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்டதாககடற்படையினர் விசாரணையின்போது தெரிவித்தனர்.



மஞ்சள் பொதிகளை கடத்துவதற்கு முற்படுவதாக உடப்பு கடற்படையினருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத்தகவலுக்கமையதம்பபண்ணி கடற்படை உதவியுடன் புதன்கிழமை அதிகாலை பள்ளிவாசல்பாடு கடற் கரைப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, டிங்கி படகில் சுமார் 44 உரைகளில் 1,373 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் பொதிகள் இந்தியாவிலிருந்து... 

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் சுமார் 50 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியென தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட மஞ்சள் பொதிகளையும்மற்றும்டிங்கிபடகையும் மேலதிகவிசாரணைகளுக்காகபுத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக தம்பபண்ணி கடற்படையினர் தெரிவித்தனர்.(05)



# பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொண்டு சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்புவதே இலக்கு

## ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டு

(எம் சியாஜ்)

இலங்கையில் கடந்த காலங்களில் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாக சமாளித்தது போன்றே எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடாத வகையில் சுபீட்சமான நாடு ஒன்றைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் இலக்காகும் என்று வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மாகாணத்தின் 33 உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்பந்த, தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிய சுமார் 800 இற்கும் மேற்பட்டோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை நாத்தாண்டிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் –

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப எமது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மாற்றமடைய வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் வரி அறவிடல், பாதைகள் பராமரித்தல் உள்ளிட்ட வழக்கமான செயற்பாடுகளுக்கு அப்பால் அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உச்ச பட்ச பலனைப் பெறவும், அதனைக்கொண்டு வருமானம் ஈட்டிக் கொள்வதற்குமான வழிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஸ்மார்ட் டெக்னோலொஜி எனும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டை நவீன சவால்களைச் சமாளிக்கும் வகையில் மாற்றியமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒரு கட்டமாக இனியொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில் நாட்டை சுபீட்சமாக மாற்றி, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். அதனை அடியொற்றி வடமேல் மாகாணத்தை தொழில் நுட்பம், சுகாதாரம், கல்வி, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மேம்பட்ட மாகாணமாக மாற்றி அமைப்பது எங்கள் இலக்காகும்.

அதனை மனதில் கொண்டு அனைத்து அரச ஊழியர்களும் தங்கள் கடமைகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆளுனர் நஸீர் அஹமட் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன , உள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, நகர அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்களான அமல் சிந்தக மாயாதுன்னே, சமன்பிரிய ஹேரத், யதாமினி குணவர்த்தன, அலிசப்ரி ரஹீம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (05)

# மீண்டும் இயங்க தொடங்கியது சம்மாந்துறை குவாசி நீதிமன்றம்

(தில்சாத் பர்வீஸ்)

அண்மைக்காலமாக இடைநிறுத்தப்பட்ட சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு மீண்டும் புதன்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயற்பாடு நீதிச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சம்மாந்துறை குவாஷி நீதிமன்றத்தின் பதில் குவாஷி நீதிபதியாக கடமையாற்ற நியமிக்கப்பட்ட அஹமட் லெவ்வை ஆதம்பாவா தலைமையில் உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வின் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் றினோசா, மனித எழுச்சி நிறுவன பணிப்பாளர் கே. நிஹால் அகமட், சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, எச்.ஈ.ஓ.நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஜெனிற்றா, சம்மாந்துறை உலமா சபை செயலாளர், சம்மாந்துறை முன்னாள் குவாசி நீதிபதி எஸ்.எல். அப்துல் சலாம், சம்மாந்துறை குவாசி நீதிமன்ற செயலாளர் வஹாப், மற்றும் மனித எழுச்சி நிறுவன (ர்நுழு) தொண்டர்களான பாத்திமா முர்ஷிதா மற்றும் மிஸ்ரியா, மற்றும் சாய்ந்தமருது குவாசி நீதிமன்ற உத்தியோகத்தர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். முஸ்பிறா, உளவளத் துணை உத்தியோகத்தர் எம்.சி. பௌமிலாவும் கலந்து கொண்டனர்.

இதன் போது மனித எழுச்சி அமைப்பின் செயலாளரும் சம்மாந்துறை குவாசி நீதிமன்றின் தொண்டராகக் கடமையாற்றும் ரிபா முஹம்மட் முஸ்தபா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

கடந்த காலங்களில் பொதுமக்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சமூக ஊடகங்களில் வெளியாகிய காணொளி காரணமாகவும் இதர குற்றச்சாட்டுக்கள் காரணமாகவும் முன்னாள் சம்மாந்துறை குவாசி நீதிமன்ற நீதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத் தக்கது. (05)

# ஐ.தேசிய கட்சி அலுவலகம் மீது தம்புள்ளையிலுள்ள தாக்குதல்

தம்புள்ளையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அலுவலகமும், அங்கு இருந்த அனைத்து பதாதைகளும் பாரியளவில் சேதமடைந்துள்ளனஎனஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் தம்புள்ளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அவர்கள் சம்பவம் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(05)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க கவனவீர்ப்பு போராட்டம்







(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க கோரிய கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று புதன்;கிழமை இடம் பெற்றது.

இதனை கிளிவெட்டி தங்க நகர் பகுதி சமூக மட்ட அமைப்புக்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

அண்மையில் நடேஸ் குமார் வினோதி எனும் யுவதி கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் சடலமாக மீட்கப்பட்டார் இதனை கண்டித்து அப் பகுதியினர் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். குறித்த கொலையை மேற்கொண்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். பிணை வழங்கக் கூடாது போன்ற விடயங்களை முன்வைத்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் பலர் இதன் போது ஈடுபட்டனர். (05)



# கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் திஸாநாயக்கவுக்கு கௌரவம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட போதனாசிரியர்களான எம்.எம்.செய்னுதீன், எம்.ஐ. பாரூக் ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபல்யூ .ஜீ.திஸாநாயக்கவை நட்பு ரீதியாக சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, கிழக்கு மாகாண கல்வித் துறைக்காக அர்பணிப்புடன் சேவையாற்றி வரும் கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கவுக்கு அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சிரேஷ்ட போதனாசிரியர்களால் நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட போதனாசிரியரான எம்.எம்.பாசிலும் கலந்து கொண்டார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2024இல் வெளியிடப்பெற்றது